31st January 1966]

படுகிறார்களா அல்லது, காவல் கைதிகள் போல் நடத்தப்படுகிறார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் தொழிற் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, இவர்களெல்லாம் இந்தக் குறிப்பிட்ட சட்டப்படி தண்டனைக்கு உட்பட்டவர்களாவர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்களுக்கு எப்படிச் சாப்பாடு போடுகிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

Short supply of coffee seeds

* 25 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the short supply of coffee seeds, especially the peaberry variety in the State; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) According to the Chief Coffee Marketing Officer's report, there has been no short supply of coffee seeds especially peaberry variety in this State.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : பொதுவாக, காப்பி போர்டு நம்முடைய ராஜ்யத்திற்குத் தேவையான பீபரி காப்பிக் கொட்டையில் மிகக் குறைந்த அளவேதான் ஒதுக்குகிறார்கள். அதுமட்டுமல்லாமல் நல்லரகங்களை வெளியில் அனுப்பிவிட்டு மட்ட ரகமானவற்றைத் தான் இங்கே சப்ளை செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அரசாங்கம் இதைக் கவனித்து நம் ராஜ்யத்திற்குத் தேவையான உயர்ந்த ரகக் கொட்டையை இங்கே சப்ளை செய்ய என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்கள்?

கனம் திரு. வெ. ராமையா : நம் ராஜ்ய நிலைமையைப் பற்றிப் பதில் சொன்னேன். காப்பி மார்க்கெட்டிங் போர்டில் இருந்து ஏறத்தாழ 50 சத விகிதம் நம் ராஜ்யத்திற்குக் கிடைக்கிறது. அதுவும் இந்தக் குறிப்பிட்ட ரகம் 60 சத விகிதம் கிடைக்கிறது. மற்ற மாநிலங்களோடு பார்க்கும்போது இது மிகவும் அதிகம். இருந்தும், காப்பியின் தேவை அதிகமாக இருக்கிற காரணத்தினால் இது மிகவும் குறைவு போலத் தோன்றுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம் தேசத்திலே குறிப்பாக நம் மாநிலம் தான் காபி சாப்பிடும் பழக்கம் கொண்டது. மற்ற மாநிலங்களில் தேயிலையைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே, நம் மாநிலத்திற்கு இன்னும் அதிகமாக காப்பிக்கொட்டை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? காபி போர்டின்—டெப்போ விநியோகத்தில் உள்ளே துஷ்பிரயோகம் செய்ய வழி இருப்பதனால் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : காபி போர்டின் டெப்போக்கள் மூலம் மட்டும் அல்ல, விநியோக ஏற்பாடு. தனிப்பட்ட வியாபாரிகளும் சந்தையில் போய் ஏலம் எடுத்து வருகிறார்கள், இன்னும்

கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவும் விநியோக ஏற்பாடு இருக்கிறது. எல்லாவற்றின் மூலமாகவும் தான் விநியோகிக்கப்படுகிறது. நான் முன்பு சொன்னபடி, மொத்தத்தில் 50 சத விகிதம், பீப்ரி மாத்திரம் 66 சத விகிதம் நம் ராஜ்யத்திற்குக் கிடைக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர்: காப்பி உற்பத்தியாளர்களுக்குத் தேயிலையைவிட காப்பியில் குறைந்த வருமானம் வருகிறது. அதன் காரணமாகத் தேயிலையை உற்பத்தி செய்ய வேண்டிய காப்பித் தோட்டங்களை எல்லாம் அழித்து வருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தெரிந்தால் காப்பி உற்பத்தியையும் அதிகப்படுத்த எந்த, எந்த வகையில் ஊக்கம் அளிப்பார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: இதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தனியார்கள் சந்தையில் ஏலம் எடுப்பதையும் சேர்த்துப் புள்ளிவிவரம் சொல்வதாகச் சொன்னார்கள். அப்படியானால் அது மிகவும் குறைவாகத்தான் இருக்கும். தனியார்கள் ஏலம் எடுப்பது இந்த ராஜ்யத்தில் முறையாக விநியோகம் செய்வதற்கில்லை. அவற்றை வறுத்து அறைத்து அதிக லாபத்தில் விற்பதற்காகத்தான். ஆகவே, அடையாளக் கார்டுகளை வழங்கியாவது இந்த ராஜ்யத்தில் முறையான விநியோக ஏற்பாட்டுக்குத் தக்க வகை எடுத்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நான் நம் ராஜ்யத்திற்கு எந்த, எந்த முறையில் விநியோகம் செய்யப்படுகிறது என்று சொன்னேன். இந்த விநியோக முறையில் குற்றங்குறைகள் இருந்தால் கவனிக்கப்படும்.

திரு. வை. சங்கரன்: நம் ராஜ்யத்தில் பீபரிக் கொட்டையின் தேவை என்ன? கிடைப்பது எவ்வளவு என்ற புள்ளிவிவரம் கொடுக்க முடியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: மொத்தத் தேவை எவ்வளவு என்கிற விவரம் என்னிடம் இல்லை. மொத்தமாக இங்கே விநியோகம் செய்யப்படுகிற அளவு சொல்ல முடியும்.

PLANTATION PB ALONE.

Channel of release.	Total quantity released through all channels from the Pool from 1st January 1965 to 31st August 1965.	Total quantity of coffee absorbed in Madras State out of the total released during the period 1st January 1965 to 31st August 1965.
	METRIC TONNES.	METRIC TONNES.
(1)	(2)	(3)
Propaganda Department ..	296	145
Co-operative Societies ..	409	263
Local Sales	384	200
Pool Sales	1,292	906
Total ..	2,381	1,514

31st January 1966]

திரு. மீ. கலியாணசுந்தரம் : காப்பி போர்டின் பிரசாரப் பிரிவுகளின் மூலம் விநியோகம் செய்வதில் வியாபாரிகளுக்குக் கொடுக்கக் கூடாது. பொது மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று காப்பி போர்டு நம் அரசாங்கத்திற்கு அறிவிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்களுடைய விநியோக முறை எப்படி இருக்கிறது என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துப் பதில் சொல்கிறேன்.

Sewage farm for Madras City

* 26 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister a sewage farm for Madras City at R.V. Nagar;

(*a*) whether there is any proposal for the establishment of a sewage farm for Madras City at R. V. Nagar;

(*b*) whether the proposed site was inspected jointly by the Minister for Local Administration and the Minister for Public Health; and

(*c*) the decisions if any, arrived at ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) சென்னை நகரின் 5-ஆவது மண்டலத்தில் கழிவுநீர்ப் பண்ணையை அமைப்பதற்கென முதலில் குறிப்பிடப்பட்ட இடத்தைத் தலநிர்வாக அமைச்சரும் சுகாதார அமைச்சரும் பார்வையிட்டனர்.

(உ) கழிவுநீரை அகற்றுவதற்கு கழிவுநீர்ப் பண்ணை முறை தேவையில்லை என்றும், மாறாக, கழிவுநீரைச் சுத்தம் செய்தல், உப்பங்கழிகளை வெட்டிக் கழிவுநீரை அப்புறப் படுத்துதல் ஆகிய முறைகளை முழு அளவில் செயல் படுத்துவதென்றும் இறுதியாக முடிவெடுக்கப்பட்டது. இதற்காகப் பள்ளிக்காரணை சதுப்பு நிலத்திற்கருகில் தகுதியானதோர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தொழுநோய் உள்ள பிச்சைக்காரர்களுக்கு புகலிடம்

*** 27 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 4—11—1965-ல் நடைபாதையில் வசிக்கும் தொழு நோய் உள்ள பிச்சைக்காரர்களைப் போலீசார் பிடித்தனரா ?

(இ) ஆமெனில், அவர்கள் எவ்வளவு பேர், அவர்களுக்கு எங்கு புகலிடம் கொடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : தொழு நோய் உள்ள பிச்சைக்காரர்கள் நடைபாதையில் வசிக்கிறார்கள். அப்படி வசிப்பதன் மூலமாக மற்றவர்களுக்கும் இந்த நோய் பரவுவதற்கு வழியேற்படு